

அலகு 2


# நமது நண்பர்கள்






## கற்றல் நோக்கங்கள்

- நமது நண்பர்கள் பற்றி அறிந்துகொள்ளல்.
- அவர்களின் வேலையின் தன்மையைப் பற்றி புரிந்துகொள்ளல்.
- சமூக தொழிலாளர்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளல்.



J0IPA



சமுத்ரா என்ற ஏழு வயது சிறுமி தனது அம்மா வெண்ணிலாவுடன் மளிகைப்பொருள்கள் வாங்க அங்காடிக்குச் செல்கிறாள். அவர்கள் நடந்து செல்லும்பொழுது பல்வேறு வகையான தொழில்கள் செய்பவர்களைக் கடந்துச் செல்கின்றனர்.





3rd_Social_Science_Unit_2.indd 132 2/19/2020 8:16:09 PM

அம்மா வெண்ணிலா: செல்லமே சமுத்ரா, நாம் சாலையில் நடந்துச் செல்லும்போது வலது புறமாக மட்டுமே செல்ல வேண்டும். நடுவில் செல்லக்கூடாது. நாம் அங்காடியின் உள்ளே செல்லும் பொழுது கூட்டம் அதிகமாக இருக்கும். தனித்து செல்லாதே.

சமுத்ரா: அம்மா! ஏதோ ஒலி கேட்கிறதே! என்ன ஒலி அது? மணியோசையா?


அம்மா: முதலில் ஓரமாக வா. அது தீயணைப்பு வாகனத்தின் ஓசை. ஏதாவது ஒரு இடத்தில் தீப்பிடித்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

சமுத்ரா: அப்படியா!

அம்மா: நடந்து செல்லுபவர்களுக்கான எச்சரிக்கை மணி அது. அப்பொழுதுதான் தீயணைப்பு வாகனத்திற்கு வழிவிடுவார்கள்.

சமுத்ரா: எதற்காக வழிவிடவேண்டும் அம்மா?

அம்மா: அது மிகவும் அவசரத்தைக் குறிக்கும். பாதிக்கப்பட்ட இடத்திற்கு சரியான நேரத்திற்கு சென்றால்தான் மக்களையும், பொருள்களையும் காப்பாற்ற முடியும்.





3rd_Social_Science_Unit_2.indd 133 2/19/2020 8:16:10 PM

சமுத்ரா: தீயணைப்பு வாகனம் எப்படி மனிதர்களைக் காப்பாற்றும்?

அம்மா: உனது ஆர்வத்தைக் கண்டு பெருமைப்படுகிறேன். அவ்வண்டியில் மக்களையும், பொருள்களையும் காப்பாற்றும் தீயணைப்பு வீரர்களுடன், நீர், நுரை, ஏணி மற்றும் சில தீயணைப்பு உபகரணங்கள் இருக்கும். தீவிபத்தைத் தவிர மற்ற அவசரக்காலங்களில் கூட உதவும்.

சமுத்ரா: அம்மா **தீயணைப்பு வீரர்கள்** பற்றி கூறுங்கள். அவர்கள் தீயைக் கண்டு பயப்படமாட்டார்களா?

அம்மா: **தீயணைப்பு வீரர்கள்** அதற்கென்று பயிற்சி பெற்று இருப்பார்கள். அவர்கள் பாதுகாப்பு கவசம் அணிந்திருப்பார்கள். பாதிக்கப்பட்ட இடத்தில் தண்ணீர்க் கொண்டு அணைப்பார்கள். மக்களையும், பொருள்களையும் பாதுகாப்பான இடத்தில் சேர்ப்பார்கள்.

சமுத்ரா: அவர்கள், தீக்காயம் அடைந்தவர்களை எப்படிக் காப்பாற்றுவார்கள்?

அம்மா: அவர்களை உடனடியாக 'அவசர ஊர்தியில்' அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள். அவசர ஊர்தியில் முதலுதவிக்கான அனைத்து உபகரணங்களும் இருக்கும். பாதிக்கப்பட்ட மக்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெறுவர்.






3rd_Social_Science_Unit_2.indd 134 2/19/2020 8:16:11 PM

## செயல்பாடு
### நாம் எழுதுவோம்

**செவிலியர் என்பவர் மருத்துவருக்கு உதவியாக இருப்பவர். நோயாளிகளை அக்கறையுடன் கவனித்துக் கொள்பவர்.**

செவிலியரின் பல்வேறு கடமைகளைப் பற்றி எழுதுக.





- காயங்களைத் தைத்தல்.
- நோயாளிகளுக்கு ஊசிப் போடுதல்.
- 
- 

**சமுத்ரா:** யார் வேண்டுமானாலும் அந்த அவசர ஊர்தியில் செல்லலாமா?

**அம்மா:** அந்த அவசர ஊர்தியானது அவசர சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு மட்டும்தான்.

**சமுத்ரா:** அவசர சிகிச்சையா?

**அம்மா:** அவசர சிகிச்சை என்பது மிகவும் அபாயக்கட்டத்தில் இருப்பவர்களுக்கு, அதாவது நெஞ்சுவலி, மயக்கம், நடக்க இயலாமை, விபத்தில் சிக்கியோர் போன்றவர்களுக்கு அளிப்பது.






3rd_Social_Science_Unit_2.indd 135 2/19/2020 8:16:15 PM

சமுத்ரா: அந்த வாகனத்தில் எப்படி சிகிச்சை அளிப்பார்கள்?

அம்மா: அந்த வாகனத்தில் முதலுதவி மட்டும் அளிப்பார்கள்.

சமுத்ரா: முதலுதவியா?

அம்மா: **முதலுதவி** என்பது முறையான சிகிச்சைக்கு முன் அளிக்கப்படும் உயிர் காக்கும் உதவி. அந்த வாகனத்தில் மருத்துவர், செவிலியர் மற்றும் முதலுதவி உபகரணங்கள் மற்றும் மருந்துகள் இருக்கும்.

ஒருவர் **அவசர ஊர்தி வாகனத்தை** எவ்வாறு தொடர்பு கொள்வர்?


நாம் அறிந்து கொள்வோம்.

### கைமாறு கருதாது பிறருக்கு உதவி செய்பவர்களின் சட்டம் (Good Samaritan Law)

கைமாறு கருதாது பிறருக்கு உதவி செய்பவர்களின் (Good Samaritan Law) சட்டத்தை மத்திய அரசு 2014–இல் உருவாக்கியது. இச்சட்டமானது விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

இச்சட்டத்தின்படி யார்வேண்டுமானாலும் விபத்தில் சிக்கியவர்களுடன் மருத்துமனைக்குச் செல்லலாம். அவர்களின் பெயரை மருத்துவமனையில் சிகிச்சைக்காகத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. சிகிச்சைக்கான பணம் அளிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. காவல்துறை மற்றும் இதர சட்ட விதிகளுக்குப் பயப்படாமல் எந்த ஒரு மனிதரும் தாமே முன்வந்து உதவி செய்ய இச்சட்டம் உதவுகிறது.

### சிந்தனை செய்






3rd_Social_Science_Unit_2.indd 136 2/19/2020 8:16:16 PM

**சமுத்ரா:** என்ன கட்டடம் அது?

**அம்மா:** அங்காடியை விரிவுபடுத்துவதற்கான கட்டடம் அது.

**சமுத்ரா:** எதற்காக கட்டடம் கட்டப்படுகிறது?

**அம்மா:** மக்களையும், வியாபாரிகளையும் சூரிய ஒளி மற்றும் மழைப் பொழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக கட்டப்படுகிறது.

**சமுத்ரா:** இக்கட்டடத்தை யார் கட்டினார்?

**அம்மா:** **கட்டடப் பொறியாளர்** கட்டினார். அவர் இக்கட்டடத்திற்கான திட்டவரைபடத்தையும், வடிவமைப்பினையும் உருவாக்கினார்.

**சமுத்ரா:** வீட்டிற்கான வடிவமைப்பையும் **கட்டடப் பொறியாளர்** உருவாக்குவாரா?

**அம்மா:** ஆம். கட்டடப் பொறியாளர் வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள், பாலங்கள், கோயில்கள், தொழிற்சாலைகள் மற்றும் உயரமான கட்டடங்கள் போன்றவற்றை வடிவமைக்கிறார். கட்டடப்0பொறியாளர் தயாரித்த திட்டவரைபடத்தைப் பயன்படுத்தி கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

**சமுத்ரா:** ஓ! அப்படியா! அம்மா நாம் ஏன் இந்த மண் பாதையில் நடக்கிறோம்? இது நமது வழியல்லவே.






3rd_Social_Science_Unit_2.indd 137 2/19/2020 8:16:17 PM

**அம்மா:** நம் வழக்கமான பாதையில் **சாலைத் தொழிலாளர்கள்** சாலை போடுகின்றனர்.

**சமுத்ரா:** சாலைகள் நமக்காகத்தான் போடப்படுகிறதா?

**அம்மா:** ஆமாம், **சாலைத் தொழிலாளர்கள்** வாகனங்கள் மற்றும் மக்கள் வசதியாக செல்ல சாலைகளைப் போடுகின்றனர்.

சமுத்ரா, இப்பக்கம் பார்!

**சமுத்ரா:** ஏன் அம்மா?.... என்ன சிறப்பு?

**அம்மா:** வயல்கள் பசுமையாக எவ்வளவு அழகாக உள்ளன!

**சமுத்ரா:** ஆம் அம்மா. மிகவும் அழகாக உள்ளன. அங்கு யார் வேலை செய்கிறார்கள் அம்மா?

**அம்மா:** அவர்கள் **விவசாயிகள்.** அவர்களால் தான் நாம் உணவு பெற்று, மகிழ்ச்சியாக வாழ்கிறோம்.






3rd_Social_Science_Unit_2.indd 138 2/19/2020 8:16:18 PM

**செயல்பாடு**
நாம் எழுதுவோம்

## விடைகாண்க



**1** எனக்கு முன்னே எனது மணியோசை வரும் தீயிலிருந்து உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பேன்.

நான் யார்? ____________________

குறிப்பு : ப்புயணைதீ வாம்கன

**2** நான் மக்களை பாதுகாப்பேன். குற்றங்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பேன். மக்கள் விதிகளைப் பின்பற்றுகிறார்களா என உறுதிப்படுத்துவேன்.

நான் யார்? ____________________

குறிப்பு : லவர்கா

**3** நான் மண்ணில் கடுமையாக உழைப்பேன். விதைப்பேன். ஆதலால் அம்மண் நமக்கு உணவு தரும்.

நான் யார்? ____________________

குறிப்பு : விசாவயி

சமுத்ரா: அம்மா, அங்கே பாருங்கள் பேருந்து!

அம்மா: பேருந்து நமது போக்குவரத்துச் சேவைகளில் ஒன்று.**தீயணைப்புவீரர்கள்,விவசாயிகள்,பொறியாளர்கள்** போன்று **ஓட்டுநர்கள்** மற்றும் **நடத்துனர்களின்** சேவை மிகவும் மகத்துவமானது. அவர்கள்தான் போக்குவரத்து எளிதாக நடைபெற உதவுகிறார்கள்.

சமுத்ரா: அம்மா, ஏதோ ஒரு வித்தியாசமான எச்சரிக்கை ஒலி கேட்கிறதே?

அம்மா: ஆம். அது காவல்துறை வாகனத்தின் எச்சரிக்கை ஒலி.



3rd_Social_Science_Unit_2.indd 139 2/19/2020 8:16:19 PM

**சமுத்ரா:** காவல்துறை வாகனமா ஏன்?

**அம்மா:** இது காவல்துறையின் வழக்கமான ரோந்து பணி, மக்களைப் பாதுகாக்கவும், கூட்டநெரிசலை ஒழுங்குபடுத்தவும் வருகிறார்கள். மக்களையும், பொருள்களையும் பாதுகாப்பார்கள். அனைவரும் விதிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா என உறுதிப்படுத்துவார்கள்.


**சமுத்ரா:** அம்மா....

**அம்மா:** என்ன?

**சமுத்ரா:** நம் அண்டை வீட்டு அண்ணா, நம் நாட்டு எல்லையில் வேலை செய்கிறார் என்று சொன்னீர்களே!..

**அம்மா:** அவர் **இராணுவ வீரராக** இந்திய எல்லையில் பணிபுரிகிறார். **இராணுவ வீரர்கள்** நம் நாட்டையும், மக்களையும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கின்றனர். தமது உயிரைக்கூடப் பொருட்படுத்தாமல் அவர்கள் நமக்காக குடும்பங்களைத் துறந்து பணிபுரிகிறார்கள்.

**நாம் அறிந்து கொள்வோம்.**



இந்திய தேசிய இராணுவத்தை, **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்** உருவாக்கினார்.





3rd_Social_Science_Unit_2.indd 140 2/19/2020 8:16:26 PM

சமுத்ரா: எனக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது. எங்களின் ஆசிரியர் நேற்று இராணுவப்படையைப் பற்றிக் கூறினார்.

அம்மா: சமுத்ரா உனக்குத் தெரியுமா? ஆசிரியர்களின் பணி மிகவும் புனிதமானது. அவர்கள் மாணவர்களுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும் போதித்து (Enlightens) சிறந்த குடிமக்களாகத் திகழ உதவி புரிகிறார்கள்.


செல்லமே நாம், பிரதான சாலைக்குவந்துவிட்டோம். என் கையைப் பிடித்துக் கொள்.

## செயல்பாடு

## நான் யார்?

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1 (தையல்காரர்)



அ) நான் துணிகளைத் __________

ஆ) நான் ஒரு __________

2 (வண்ணம் தீட்டுபவர்)



அ) நான் சுவரில் __________

ஆ) நான் ஒரு __________

3 (குழாய் செப்பனிடுபவர்)



அ) நான் குழாய்களை __________

ஆ) நான் ஒரு__________


4 (காவலாளி)



அ) நான் வீடுகளையும் மக்களையும் __________

ஆ) நான் ஒரு__________

5 (மின் அமைவு செப்பனிடுபவர்)



அ) நான் மின் சாதனங்களைப் __________

ஆ) நான் ஒரு__________



3rd_Social_Science_Unit_2.indd 141 2/19/2020 8:16:29 PM

சமுத்ரா: அம்மா, சாலையின் நடுவே நிற்பது யார்?

அம்மா: ஓ! அவர்தான் **போக்குவரத்துக் காவலர்.**

சமுத்ரா: அவர் அங்கு ஏன் நிற்கிறார்?

அம்மா: அவரின் பணி மிகவும் முக்கியமானது. அவர்தான் வாகனங்களைக் கட்டுப்படுத்தி சரியான திசையில் செல்லுமாறு அறிவுறுத்துவார்.பாதசாரிகளைப் பாதுகாப்பார் (Protect).

சமுத்ரா: அம்மா, அந்த உயரமான கட்டடம் என்ன கட்டடம் அம்மா?

அம்மா: அதுதான் **நீதிமன்றம்.**

சமுத்ரா: நீதிமன்றம் என்றால் என்ன?

அம்மா: அனைத்து வகையான பிரச்சனைகளுக்கும் சட்டப்படி தீர்வுகாணும் இடமாகும். **நீதிபதி** மக்களுக்குச் சரியான தீர்ப்பு வழங்குவார். நமது உரிமைகளைப் பாதுகாப்பார்.

சமுத்ரா: அம்மா, எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. இத்தனை மனிதர்களும் நமக்காக பணிபுரிகிறார்கள். எனக்கு இவர்களை நினைத்துப் பெருமையாக உள்ளது.





3rd_Social_Science_Unit_2.indd 142 2/19/2020 8:16:29 PM

நாம் அறிந்து கொள்வோம்.

நமது **அரசியல் அமைப்பின் பாதுகாவலன்** (guardian) **உச்சநீதிமன்றம்** ஆகும்.

அம்மா: சமுத்ரா, நீ என்னவாக வேண்டும் என விரும்புகிறாய்? உனக்கு ஏதேனும் ஆசை உள்ளதா?

சமுத்ரா: எனக்கு ஒரு ஆசை உள்ளது. நான் நன்றாக படித்து நல்ல வேலையைத் தேடவேண்டும்என விரும்புகிறேன். அதே நேரத்தில் நான் நமது தோட்டத்தையும், வயலையும் பராமரிப்பேன்.

அம்மா: நாம் வீட்டிற்கு வந்துவிட்டோம். செல்லமே..... கதவைத் திற.

## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| **போதித்தல்** | : | Enlightens |
| **பாதுகாவலன்** | : | Guardian |
| **பாதுகாத்தல்** | : | Protect |

## மீள்பார்வை

- நமது நண்பர்களாகிய ஆசிரியர், மருத்துவர், பொறியாளர், காவல்காரர் போன்றோர் நமக்காகப் பணிபுரிகின்றனர்.
- தீயணைப்பு வீரர்கள் மக்களையும், உடைமைகளையும் தீயிலிருந்து காப்பாற்றுகின்றனர்.
- ஒரு கட்டடப்பொறியாளர் கட்டடத்திற்கு வடிவமைப்பினைத் தருகிறார்.
- சாலைப்பணியாளர்களால் சாலைகள் போடப்படுகின்றன.
- விவசாயிகளிடமிருந்து நாம் உணவைப் பெறுகிறோம்.
- இராணுவ வீரர்கள் நமது நாட்டைப் பாதுகாக்கின்றனர்.
- நமக்காகவும், நமது நாட்டிற்காகவும் சேவை செய்யும் மக்களை எண்ணி பெருமைக் கொள்வோம்.



# மதிப்பீடு



**I. அடைப்புக் குறியிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

(சாலை, நீதிபதி, முதலுதவி, ஆசிரியர், மருத்துவர்)

1. முறையான சிகிச்சைக்கு முன் அளிப்பது_____________.
2. செவிலியர் ___________ க்கு உதவி புரிவார்.
3. மக்கள் வழக்குகளுக்கு தீர்ப்பு சொல்லுபவர் _____________.
4. நமக்கு அறிவை மேம்படுத்துபவர்____________.
5. சாலைப்பணியாளர்கள்_____________ போடுகின்றனர்.

**II. சரியா / தவறா என்று எழுதுக.**

1. தையல்காரர் என்பவர் துணி தைப்பவர். (     )
2. மின்பழுது செய்பவர், குழாய்களைச் சரிசெய்வார். (     )
3. போக்குவரத்துக் காவலர் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவார். (     )
4. மருத்துவர் மக்களையும், உடைமைகளையும் காப்பாற்றுவார். (     )
5. உச்சநீதிமன்றம் நமது அரசியல் அமைப்பின் பாதுகாவலன்.(     )

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. நமக்கு சேவை புரிபவர்கள் சிலரைக் குறிப்பிடுக.
2. தீயணைப்பு வீரர்கள் என்பவர்கள் யார்?
3. ஒரு கட்டடப்பொறியாளரின் பணி யாது?
4. விவசாயிகள் பற்றி எழுதுக.
5. இராணுவ வீரர்கள் நமது நாட்டை எவ்வாறு பாதுகாப்பார்கள்?



3rd_Social_Science_Unit_2.indd 144 2/19/2020 8:16:32 PM

செயல்பாடு

# செயல் திட்டம்

சமூக பணியாளர்களுடன் அவர்களின் உபகரணங்களைப் பொருத்தி, அவர்களின் பணியை எழுதுக.

1) 

அ)  ____________________

2) 

ஆ) 

____________________

3) 

இ)  ____________________

4) 

ஈ)  ____________________



3rd_Social_Science_Unit_2.indd 145 2/19/2020 8:16:35 PM